# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2009, சனவரி மாதம் 30 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

*[2009 ஆம் ஆண்டு சனவரி 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது]*

*ச.வ.ஓ. (கூட்.) 11/2006*

## மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*“மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப்பொறுப்பு” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான நம்பிக்கைப் பொறுப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க பிரசித்த நொத்தாரிசான விக்டர் பிரங்னவாச கருணாரத்ன என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1997 திசெம்பர் நான்காம் தேதிய, 67 ஆம் இலக்க, நம்பிக்கைப்பொறுப்பு உறுதியுடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் உருவாக் கப்பட்டுள்ளதாதலாலும் :* *முன்னுரை.*

*அத்துடன், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக் காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அது, கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

***1.*** *இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

***2.*** *(1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் “நம்பிக்கைப்பொறுப்பு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப்பொறுப்பின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப் பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகை* *மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.*

2-PL 003224 -1,025 (2008/09)

யோரான அத்தனை ஆட்களும் (“கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப் பொறுப்பு” என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத்தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவன வாதல் வேண்டும் :-

(அ) மாதம்பே தனிவெல்ல மஹா தேவாலயத்தையும் அதன் வழிபாட்டிடத்தையும் பேணுதலும், முன்னேற்றுதலும், முகாமைசெய்தலும் ;

(ஆ) மாதம்பே தனிவெல்ல மஹா தேவாலயத்தில் எல்லா சமயச்சடங்குகளையும் புரிதலும் அனுசரித்தலும் ;

(இ) சொல்லப்பட்ட தேவாலயத்தின் வருடாந்த தானங் கொடுத்தலை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், நிறைவேற்றுதலும் ;

(ஈ) பௌத்தர்களிடையே பௌத்த தர்மத்தைப் பரப்புவதற்கும் சங்கத்தின் ஒழுங்கை வளர்ப்பதற்கும் ஏற்பாடுசெய்தல் ;

(உ) பிக்குமார்களினால் பௌத்த தர்மம் பௌத்தர்களுக்குப் போதிக்கப்படுவதற்கும் அத்துடன் அத்தகைய பிக்குமார்களின் பராமரிப்பிற்கும் சேம நலத்திற்கும் ஏற்பாடுசெய்தல் ; அத்துடன்

(ஊ) புத்தரின் போதனைகளுக்கிணங்க வாழ்வொன்றை வாழும்படி பௌத்தர்களை ஊக்குவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நம்பிக்கைப்பொறுப் பாளர்கள் சபையொன்றினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படக்கூடிய எவையேனும் விதிகளுக்கும் அமைய, நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப்பொறுப் பாளர் சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் மாதம்பே தனிவெல்ல மஹா தேவால நம்பிக்கைப்பொறுப்பின் உறுப்பினர்களைக்கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம், -

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவனக் கையளிப்பு, என்பவற்றின் பயனைக் கொண்டோ அல்லது வேறுவகையாகவோ அதற்கு உரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளவும் வைத்திருக்கவும் ;

(ஆ) அத்தகைய ஆதனம் எதனையும் விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமனஞ்செய்யவும், தொழிலுக்கமர்த்தவும், அவர் களுக்கு ஊதியமளிக்கவும், அவர்களின்மீது ஒழுக் காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகிக்கவும் மற்றும் அவர்களை வேலையிலிருந்து நீக்கஞ்செய்வதற்கும் ;

(ஈ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து பணவகையாகவோ அல்லது வேறுவகையாகவோ மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் ;

(உ) வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், கொண்டு நடாத்தவும், முடிவுறுத்தவும் அத்துடன் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங் களைக் கடன் எடுக்கவும் அல்லது திரட்டுவதற்கும் ;

(ஊ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்த கைய பிணைப்பொறுப்புக்களில் கூட்டுத்தாபனத் திற்குச் சொந்தமான பணத்தை முதலீடுசெய்வதற்கும்,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதவர்களின் வாக்குகளைக்கொண்டு பின்வரும் எல்லாக் கருமங்களுக்காக அல்லது அவற்றில் ஏதேனு மொன்றிற்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்திற்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை வகுப்பாக்கம் செய்தலும் செலுத்தப் படற்பாலனவான உறுப்பாண்மைக் கட்டணங்களும், அவர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பாண் மையிலிருந்து மீளப்பெறுதலும் அல்லது விலக்கு தலும் அகற்றுதலும் ; அத்துடன்

(ஆ) சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும் அத்துடன் அதன் தத்துவங்களும் கடமைகளும் ;

(இ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தலும், அவர் களின் பதவிக்காலமும், அவர்கள் பதவியிலிருந்து விலகுதலும், பதவியை வறிதாக்கலும் அல்லது பதவி யிலிருந்து அகற்றப்படுதலும் மற்றும் அவர்களின் தத்துவங்களும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் கடமைகளும் பணிகளும் ;

(உ) சபையின் கூட்டங்களைக் கூட்டும்போதும் நடாத்தும் போதும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அதன் நடத்தையும் ;

(ஊ) அதன் நிதியங்கள் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் இச்சட்டத்தின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அது கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புகள், மானியக்கொடைகள், நன்கொடைகள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்கள் என்றவகையில் பணமாக அல்லது பொருளாக கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடையக்கூடிய ஏதேனும் பொருத்தமான முறையில் முதலீடு செய்யப்படுதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலிலும், புரிதலிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** *(1)* கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவு சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை கூட்டுத்தாபனம் வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபை தீர்மானிக்கக் கூடியவாறான ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படவுள்ளனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.*

**9.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நம்பிக்கைப்பொறுப்பின் எல்லா தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று நம்பிக்கைப்பொறுப்பிற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும், ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**10.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர், எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையின் கட்டுக்காப்பு சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஆளிடம் அல்லது ஆட்களிடம் இருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்கள் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுவது எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசினது உரிமைகளையேனும், அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*